பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 06 2025 **SATURDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள இந்திய வீரர் சுபான்ஷு சுக்லாவுடன் தாம் நடத்திய உரையாடல் சிறப்பான முறையில் அமைந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. குஜராத் மாநிலம், கோத்ராவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

3. மத்திய அரசின் சமூக பாதுகாப்பு திட்டங்கள் 94 கோடி மக்களை சென்றடைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

4. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகிறது.

5. ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<

சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லாவுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்துரையாடினார்.

இந்த உரையாடலை தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா, தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த உரையாடல் மிகவும் சிறப்பான முறையில் அமைந்திருந்ததாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை அன்று சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட நான்கு விண்வெளி வீரர்கள் நாசா-வின் ஆக்ஸியம்-4 விண்வெளி பயணத் திட்டத்தின் கீழ் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்று ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

>>>>>><<<<<

அரசு நலத்திட்டங்களின் பயன்கள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ஆச்சாரியா வித்யானந்த் ஜி மகராஜின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் உரையாற்றிய அவர், அனைத்து தரப்பு மக்களும் ஒன்றிணைந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்க வேண்டும் என்ற முனைப்புடன் தமது தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டம், ஜல் ஜிவன் இயக்கம், ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் இலவச உணவு தானிய திட்டம் போன்ற திட்டங்களின் பயன்கள் நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் அரசு நிர்வாகம் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சியோடு, பாரம்பரியத்தையும் காக்க வேண்டும் என்ற முனைப்போடு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பாரம்பரிய சின்னங்களையும் புனித தலங்களையும் மேம்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

**Prakrit** உள்ளிட்ட மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் தொன்மை சிறப்புமிக்க சுவடிகளை மின்னணுமயமாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஆச்சாரியா வித்யானந்த் ஜி கற்றுக் கொடுத்த பெருமைமிக்க இந்திய கலாச்சாரம், நவீன காலத்தின் கலங்கரை விளக்கமாக திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் நாகரிகம் பழம்பெருமை வாய்ந்தது என்றும், ஆன்மிக குருக்கள், ஜீயர்கள், ஆச்சாரியார்கள் போன்றவர்களின் தத்துவ ஞானம் காலம் கடந்து நிற்கக்கூடியவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வன்முறைக்கு தீர்வு அகிம்சை வழிமுறையே என்பதை முதன்முதலாக உலகிற்கு உணர்த்திய நாடு இந்தியா என்று அவர் கூறினார்.

ஆச்சாரியா வித்யானந்த் ஜி-யின் தத்துவங்களும், வாழ்க்கையும் ஆன்மிக வழிகாட்டுதலோடு நின்றுவிடவில்லை என்றும், சமுதாயத்தையும், கலாச்சாரத்தையும் சீரமைக்கும் கருவியாக திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

இவ்விழாவில் கலந்து கொண்டு பேசிய மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத், ஆச்சாரியா வித்யானந்த் ஜி மகாராஜின் ஆன்மிகப் பணிகளின் சிறப்பு குறித்து எடுத்துரைத்தார்.

ஆச்சாரியா வித்யானந்த் ஜி மகாராஜின் நூற்றாண்டை ஒட்டி, அவரது உருவம் பொறிக்கப்பட்ட நாணயம் மற்றும் அஞ்சல்தலையையும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் வெளியிட்டார்.

>>>>>><<<<<

குஜராத் மாநிலம், கோத்ராவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

மியாவாக்கி காடுகள், புதிய நீர்த்தேக்கம், அறிவுசார் மையம் மற்றும் கூட்டுறவுத்துறைக்கான வளாகத்தையும் அவர் திறந்து வைத்தார்.

ஸ்ரீ கோவிந்த் குரு விஷ்வ வித்யாலயா பள்ளிக் கட்டிடத்திற்கான அடிக்கலையும் அவர் நாட்டினார்.

அஹமதாபாத் அருகேயுள்ள **Adaroda** கிராமத்தை கூட்டுறவு மாதிரி கிராமமாகவும் அவர் அறிவித்தார்.

சன்சாத் அருகே புதிய ஆரம்பப் பள்ளிகட்டிடத்தையும் திரு. அமித் ஷா காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<

மத்திய அரசின் சமூக பாதுகாப்பு திட்டங்கள் 94 கோடி மக்களை சென்றடைந்து, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. கில்பர்ட் ஹௌங்போ, நாட்டின் சமூக பாதுகாப்பு திட்டங்களின் விரிவாக்கத்தை பாராட்டியிருப்பதை வரவேற்பதாக கூறியுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ், 25 சதவீத மக்கள் பயன்பெற்று வந்த நிலையில், தற்போது 64 சதவீதமாக உயர்ந்துள்ளதையும் திரு. மன்சுக் மாண்டவியா அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் கீழ், இந்தியாவின் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறை வளர்ச்சி கண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மின்னணு பொழுதுபோக்கு உச்சி மாநாட்டில் தாம் கலந்து கொண்டது குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பொழுதுபோக்கு துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய மைல்கல்லாக டிஜிட்டல் உச்சி மாநாடு அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் மக்கள் மருந்தகங்களுக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

மலிவு விலையில் கிடைக்கும் மருந்துகள் ஏழை எளிய மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக பெரியபாளையத்தில் உள்ள மக்கள் மருந்தகப் பணியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - பணியாளர் 20 செகண்ட்ஸ்)

பிரதமரின் மக்கள் மருந்தகங்களில் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைப்பது தங்களுக்கு பேருதவியாக உள்ளது என்று பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 36 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

வேளாண் காடுகள் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில், மாதிரி விதிமுறைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் வகையிலும், வனப்பகுதி அல்லாத இடங்களில் மரங்கள் வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்கிலும் இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, மரங்கள் இறக்குமதி செய்யப்படுவதை குறைப்பது ஆகியவற்றை செயல்படுத்தும் நோக்கில் இந்த விதிமுறைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக அனைத்து மாநிலங்களின் செயலாளர்களுக்கும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

மேற்குவங்க மாநிலம், புருளியா – ஹவுரா இடையேயான பயணிகள் ரயில் போக்குவரத்தை ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைத்தார்.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ், மேற்குவங்க மாநிலத்தில் உள்ள ரயில் நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் குறித்தும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<

யுக்ரைனுடன் மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா தயாராக உள்ள அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

பெலாரஸில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பேச்சுவார்த்தையை எப்போது நடத்துவது என்பது குறித்தும், சண்டை நிறுத்தத்திற்கான நிபந்தனைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>>>><<<<<

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான அரையிறுதி சுற்றில், இந்தியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் தென்கொரியாவை வென்றது

>>>>>><<<<<

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா சற்றுமுன் வரை 4. ஓவரில் விக்கெட் இழப்பின்றி 38 ரன் எடுத்துள்ளது..

நாட்டிங்காமில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

>>>>>><<<<<